வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – சரவணன்குமார்

தேதி 21.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

மணிப்பூர், மேகாலயா மற்றும் திரிபுரா மாநிலங்களின் உதய நாளை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, இம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சட்டமியற்றும் அமைப்புகளை தரமான விவாதங்களுக்கான களமாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை, மக்களைவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா வலியுறுத்தி உள்ளார்.

இந்தியாவின் ஸ்டார்ட்-அப் சூழல், உலக அரங்கில் நாட்டின் நிலையை உயர்த்தும் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் கூறியுள்ளார்.

பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில், அரசியல் சாசனம் குறித்து மத்திய அரசால் அமைக்கப் பட்டுள்ள காட்சிக் கூடம், பெரும் எண்ணிக்கையிலான மக்களை கவர்ந்து வருகிறது.

---

மோடி வாழ்த்து (11)

மணிப்பூர், மேகாலயா மற்றும் திரிபுரா மாநிலங்களின் உதய நாளை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, இம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். நாட்டின் வளர்ச்சியில், மணிப்பூர் மாநிலம் ஆற்றி வரும் பங்கு பணிகள் வியக்கத் தக்கவை என்றும், இதுகுறித்து நாடே பெருமிதம் அடைவதாகவும் அவர் தமது செய்தியில் கூறியுள்ளார். இயற்கை வனப்பிற்கும், சுறுசுறுப்பான மக்களுக்கும் பெயர் பெற்ற

மாநிலம் மேகாலயா என்றும், வரவிருக்கும் காலங்களில், மேகாலயா தொடர்ந்து வளர்ச்சி பெறத் தாம் வேண்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வளமான கலாச்சார மரபுகளுக்கு புகழ் பெற்ற மாநிலமான திரிபுராவும், தேசிய அளவிலான முன்னேற்றத்தில், குறிப்பிடத் தகுந்த வகையில், பங்களித்து வருவதாக பிரதமர் கூறியுள்ளார்.

--------------------------

*ஓம் பிர்லா* (12)

சட்டமியற்றும் அமைப்புகளை தரமான விவாதங்களுக்கான களமாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை, மக்களைவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா வலியுறுத்தி உள்ளார். பீகார் மாநிலம் பாட்னாவில், சட்டமியற்றும் அமைப்புகளின் தலைவர்களுக்கு இடையிலான 85ஆவது அகில இந்திய மாநாட்டில், இதற்கான தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளதாக, இன்று இம்மாநாட்டின் நிறைவு விழாவில் பேசுகையில் அவர் கூறினார். சட்டமியற்றும் அமைப்புகளின் செயல் திறன், மற்றும் பொறுப்புகளை அதிகரிக்கவும், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் செயல்படுவதில் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை மேம்படுத்திக் கொள்ளவும், மாநாட்டு பிரதிநிதிகள் உடன்பட்டுள்ளதாக, மக்களவைத் தலைவர் தெரிவித்தார். பீகார் ஆளுநர் திரு. ஆரிஃப் முகமதுகான் உள்ளிட்டோர் நிறைவு விழாவில் கலந்து கொண்டனர்.

--------------------------

*ஜன்மன்* (17)

பிரதமரின் **ஜன்ஜாதி - ஆதிவாசி நியாய மகா அபியான்** என்னும் ஜன்மன் இயக்கம் குறித்து, மாவட்ட குற்றவியல் நீதிபதிகளுக்கு இடையிலான தேசிய மாநாடு ஒன்றை, மத்திய அரசு இன்று புதுடெல்லியில நடத்தியது. ஜன்மன் திட்டத்தில் பங்கேற்கும் அனைத்து 18 மாநிலங்களிலும், திட்டப் பலன்கள் மூலை-முடுக்குகள் வரை, சென்று சேர்வதை உறுதிப்படுத்தும் வகையில், அரசுக் கொள்கைகளுக்கும், கள நிலவரங்களுக்கும் இடையிலான இடைவெளியை குறைக்கும் நோக்கத்திலான இம்மாநாட்டை, மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சர்

திரு. ஜூயல் ஓராம் தொடக்கி வைத்தார். சம்பந்தப்பட்ட 18 மாநிலங்களில் இருந்து, 88 மாவட்டங்கள் மாநாட்டில் கலந்து கொண்டு, ஜன்மன் திட்டத்தின் அமலாக்கம் குறித்த தங்களின் கருத்துக்களை பகிர்ந்து கொண்டன. ஜன்மன் திட்டத்தின் கீழ், வீட்டு வசதி, சாலை வசதி, அங்கன்வாடிகள், பள்ளி விடுதிகள், பல்நோக்கு மையங்கள், மற்றும், வனவள மேம்பாட்டு கேந்திரங்களை அமைப்பது குறித்து, மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டது. குறிப்பாக, அடிப்படை வசதிகள் குறைவாக உள்ள தொலைதூரப் பகுதிகளில், வசதிகளை மேம்படுத்துவது குறித்து, விவாதங்களில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

-------------------------

பெண் குழந்தைகள் (17)

**பெண் குழந்தைகளை பாதுகாப்போம்-பெண் குழந்தைகளை படிக்க வைப்போம்** இயக்கத்தின் 10ஆம் ஆண்டு விழாவை, மத்திய அரசு நாளை புதுடெல்லியில் கொண்டாட உள்ளது. பெண் குழந்தைகளின் கல்வி, பாதுகாப்பு, மற்றும், அதிகார மேம்பாட்டிற்காக, கடந்த 10 ஆண்டுகளில், அரசு மேற்கொண்ட அயராத முயற்சிகளை கொண்டாடும் வகையிலான இவ்விழா, நாளை முதல், சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8ஆம் தேதி வரை நடைபெறும். முப்படைகள், இணை ராணுவப் படைகள், மற்றும், டெல்லி காவல் துறையைச் சேர்ந்த பெண் அதிகாரிகளுடன், மாணவிகள், மற்றும் அங்கன்வாடி ஊழியர்களும் இவ்விழாவில் கலந்து கொள்ள இருப்பதாக, மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மாநில மற்றும் மாவட்ட அளவிலும், இதேபோன்ற விழாக்கள் நடைபெற உள்ளன. **பெண் குழந்தைகளை பாதுகாப்போம்-பெண் குழந்தைகளை படிக்க வைப்போம்** இயக்கத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் தேதி, அரியானா மாநிலம் பானிப்பட்டில் தொடக்கி வைத்தார். நாட்டில், ஆண்-பெண் சமத்துவம், மற்றும், பெண் குழந்தை விகிதத்தை மேம்படுத்த, இந்த இயக்கத்தில் முக்கிய கவனம் செலுத்தப் படுகிறது.

-------------------------

நக்சல்வாதம் (13)

நக்சல்வாதம் இல்லாத இந்தியாவை உருவாக்குவதில், பாதுகாப்புப் படையினர் முக்கிய வெற்றிகளை சாதித்து இருப்பதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். இதுகுறித்து அவர் இன்று சமூக ஊடகத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். ஒடிசா-சத்தீஸ்கர் எல்லையில், இருமாநில காவல் துறைகளின் சிறப்பு அதிரடி பிரிவுகளும், மத்திய ரிசர்வ் போலீஸ் படையினரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில், 14 நக்சலைட்டுகள் கொல்லப் பட்டதாகவும், மத்திய, மாநில அரசுகளின் இத்தகைய கூட்டு முயற்சிகளால், நக்சல்வாதம் இல்லாத இந்தியா உருவாகும் என்றும், உள்துறை அமைச்சர் கூறியுள்ளார். கொல்லப்பட்ட நக்சலைட்டுகளில் ஒருவரை கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு, 1 கோடி ரூபாய் வெகுமதி அளிக்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது. கொல்லப்பட்ட நக்சலைட்டுகளில் இருவர் பெண் தீவிரவாதிகள் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

-------------------------

அறிவியல் கண்காட்சி 1 (18)

புதுச்சேரியில், பள்ளிக் கல்வி இயக்ககமும், பெங்களூரு விஸ்வேஸ்வரய்யா தொழில்-தொழில்நுட்ப அருங்காட்சியகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தென்னிந்திய அறிவியல் கண்காட்சியை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் இன்று தொடக்கி வைத்தார். உப்பளம் பழைய துறைமுக வளாகத்தில் நடைபெறும் இந்த 5 நாள் கண்காட்சியில், தென் மாநிலங்களின், பள்ளி அளவிலான அறிவியல் கண்காட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 210 அறிவியல் படைப்புகள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன.

அறிவு, படைப்புத் திறன் மற்றும் புதுமையாக்க முயற்சிகளின் கொண்டாட்டமாக அமைந்துள்ள இக்கண்காட்சியில், சாலை விபத்துகள், வயநாடு நிலச்சரிவு போன்ற சமகால பிரச்சனைகளையும் மாணவர்கள் காட்சிப்படுத்தி இருப்பது பாராட்டத்தக்கது என்று, துணை நிலை ஆளுநர் தொடக்க விழாவில் பேசுகையில் கூறினார். மாணவர் படைப்புகளின்

தரம், மற்றும் தாக்கத்தை இன்னும் மேம்படுத்தும் வகையில், மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள், இத்தகைய கண்காட்சிகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். நாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் உருவாக்கப் பட்டுள்ள ஸ்டார்ட்-அப் சூழல், உலக அரங்கில் இந்தியாவின் நிலையை

அறிவியல் கண்காட்சி 2 (6)

உயர்த்தும் என்றும், திரு. கைலாஷ் நாதன் குறிப்பிட்டார். துணை நிலை ஆளுநரின் உரையில் இருந்து சில பகுதிகள்.......

(வாய்ஸ்)

மாநில கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம் தலைமையில் நடைபெற்ற, தென்னிந்திய அறிவியல் கண்காட்சியின் தொடக்க விழாவில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி பேசுகையில், நாட்டின் வளர்ச்சி, அறிவியல் முன்னேற்றத்தையே பெரிதும் சார்ந்து இருப்பதாக கூறினார். முதலமைச்சர் மேலும் கூறுகையில்......

(வாய்ஸ்)

-------------------------

கும்பமேளா (15)

உத்தரபிரதேஷ் மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில், அரசியல் சாசனம் குறித்து மத்திய அரசால் அமைக்கப் பட்டுள்ள காட்சிக் கூடம், பெரும் எண்ணிக்கையிலான மக்களை கவர்ந்து வருகிறது. அரசியல் சாசனத்தின் உருவாக்கம், அமலாக்கம் மற்றும் அரசியல் சாசன விதிகள் குறித்து, பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன், பிரயாக்ராஜ் நகரின் திரிவேணி சாலையில், இந்த காட்சிக் கூடம் அமைக்கப் பட்டுள்ளது. அரசியல் சாசனம் தொடர்பான வரலாற்று நிகழ்வுகள், முக்கிய ஆவணங்கள், மற்றும் முக்கிய தலைவர்களின் அரசியல் சாசன பங்களிப்பு குறித்த பல்வேறு காட்சிப் பொருட்கள், இதில் இடம் பெற்றுள்ளன. அரசியல் சாசனம் உருவான விதத்தை எளிதில் புரிந்து கொள்ள ஏதுவாக, அரசியல் நிர்ணய சபையின் விவாதங்கள், ஒலி வடிவில் மக்களுக்கு வழங்கப்படுகின்றன. அரசியல் சாசனத்தின் 75 ஆண்டுகால வரலாறு

குறித்து, தொடுதிரை மூலம் மக்கள் அறிந்து கொள்ளும் வசதியும், செல்ஃபி – பாயிண்ட் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களும், காட்சிக் கூடத்தில் இடம்பெற்றுள்ளன.

--------------------------

கொல்கத்தா வழக்கு (10)

கொல்கத்தா ஆர் ஜி கர் மருத்துவக் கல்லூரி பெண் மருத்துவர் பாலியல் பலாத்கார வன்முறைக்கு ஆளாக்கி, கொலை செய்யப்பட்ட வழக்கில், குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதித்து, கொல்கத்தா சிறப்பு நீதிமன்றம் வெளியிட்ட உத்தரவின் மீது, மேற்குவங்க அரசு மேல் முறையீடு செய்துள்ளது. இன்று அரசு வழக்கறிஞர் திரு. கிஷோர் தத்தா தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவை, நீதிபதிகள் தேபாங்ஷு பசாக் மற்றும் ஷப்பார் ரஷிதி ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த கொடூர செயலில் ஈடுபட்ட குற்றவாளிக்கு, மரண தண்டனைதான் சரியானதாக இருக்கும் என்றே தாம் கருதுவதாக முதலமைச்சர் செல்வி மம்தா பேனர்ஜி தெரிவித்துள்ளார்.

--------------------------

டெல்லி தேர்தல் (19)

70 உறுப்பினர் டெல்லி சட்டமன்றத் தேர்தலுக்கான, அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இத்தேர்தலுக்கான பிஜேபி தேர்தல் அறிக்கையின் 2ஆம் பகுதியை, கட்சியின் மூத்த தலைவர் திரு. அனுராக் தாக்கூர் இன்று வெளியிட்டார். டெல்லி இளைஞர்கள் போட்டித் தேர்வுகளில் பங்கேற்க, தலா 15 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என, இந்த அறிக்கையில் உறுதிமொழி அளிக்கப் பட்டுள்ளது. ஏழை மாணவர்களுக்கு, மழலையர் கல்வி முதல், முதுகலை படிப்பு வரை, அரசுக் கல்வி நிறுவனங்களில் இலவச கல்வி, தொழிற்கல்வி, மற்றும், தொழில்நுட்பக் கல்வி பயிலும் அட்டவணைப் பிரிவு மாணவர்களுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி உதவித் தொகை உள்ளிட்ட வாக்குறுதிகளும், பிஜேபி தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. இதுகுறித்து, ஆம் ஆத்மி கட்சியின் அமைப்பாளர் திரு.

அரவிந்த் கெஜ்ரிவாலிடம் செய்தியாளர்கள் கருத்து கேட்ட போது, ஆம் ஆத்மி தலைமையிலான டெல்லி அரசு, ஏற்கனவே கல்வியை இலவசமாக்கி இருப்பதாகவும், சுமார் 18 லட்சம் ஏழைக் குழந்தைகள் இலவச கல்வி பெற்று வருவதாகவும் பதில் அளித்தார். அட்டவணை இனத்தவருக்கான இடஒதுக்கீட்டை ஆம் ஆத்மி கட்சி பலவீனமாக்கி இருப்பதாக, மூத்த காங்கிரஸ் தலைவர் டாக்டர் உதித் ராஜ், செய்தியாளர்களிடம் பேசுகையில் குற்றம் சாட்டினார்.

--------------------------

*வானிலை (7)*

கிழக்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்றும், நாளையும், தென்தமிழகத்தின் ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வடதமிழகம், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், பொதுவாக வறண்ட வானிலையே நிலவும் என்றும், காலை வேளையில், லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

--------------------------

*இந்திய அரங்கம் (8)*

சுவிசர்லாந்தின் டாவோஸ் நகரில், உலக பொருளாதாரப் பேரவையின் வருடாந்திரக் கூட்டம் நடைபெறும் வளாகத்தில் அமைக்கப் பட்டுள்ள இந்திய அரங்கை, மத்திய உணவு பதனீட்டுத் துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான், திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சவுத்ரி ஆகியோர், இன்று தொடக்கி வைத்தனர். உலக நாடுகளுடன் கூடுதல் ஒத்துழைப்பை தாங்கள் எதிர்பார்ப்பதாகவும், உலகின் உணவுக் கூடையாக இந்தியாவை மாற்றுவதே, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் விருப்பம் என்றும், திரு. பாஸ்வான் கூறினார்.

--------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

மணிப்பூர், மேகாலயா மற்றும் திரிபுரா மாநிலங்களின் உதய நாளை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, இம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சட்டமியற்றும் அமைப்புகளை தரமான விவாதங்களுக்கான களமாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை, மக்களைவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா வலியுறுத்தி உள்ளார்.

இந்தியாவின் ஸ்டார்ட்-அப் சூழல், உலக அரங்கில் நாட்டின் நிலையை உயர்த்தும் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் கூறியுள்ளார்.

பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில், அரசியல் சாசனம் குறித்து மத்திய அரசால் அமைக்கப் பட்டுள்ள காட்சிக் கூடம், பெரும் எண்ணிக்கையிலான மக்களை கவர்ந்து வருகிறது.